செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

கோ.எண்.11-264/2022-23/CICT/பிரெய்லி நூல் நாள்: 14.10.2022

# பிரெய்லி நூல் பதிப்புத் திட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழ்ச் செவ்விலக்கியங்களின் சிறப்பினை உலகெங்கும் கொண்டு சேர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. அதற்கேற்ற முறையில் மொழிபெயர்ப்புகள், ஆய்வுநூல்கள் முதலான பணிகளுக்குத் தனிச் சிறப்பு அளித்து வருகிறது. உலக மொழிகள் பலவற்றிலும் தமிழ்ச் செவ்விலக்கிய நூல்களை மொழிபெயர்க்கும் திட்டங்களைச் செம்மொழி நிறுவனம் தற்பொழுது மேற்கொண்டுள்ளது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முதன்மையான நோக்கம் தமிழின் தொன்மையையும் தனித்தன்மையையும் வெளிப்படுத்துவதாகும். அதற்கேற்ற வகையில் பல திட்டங்கள் வகுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்திய மொழிகளிலும், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் உள்ளிட்ட உலக மொழிகளிலும் செவ்வியல் நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுதல், கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முந்தைய கல்வெட்டியல், தொல்லியல் முதலான துறைகளில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், செவ்வியல் நூல்களின் சிறப்புகளை வலையொளி மூலம் பரப்புதல் முதலான திட்டங்கள் செயலாக்கம் பெறுகின்றன.

தமிழின் பெருமைமிகு இலக்கண நூலான தொல்காப்பியத்தைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஆங்கிலம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டுச் சிறப்பு செய்துள்ளது. விரைவில் மலையாள மொழியில் தொல்காப்பிய மொழிபெயர்ப்பு வெளியிடப்படவுள்ளது.

உலகின் பிற முன்னணி மொழிகளிலும் தொல்காப்பியம் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றது.

பௌத்த சமயத்தைப் பின்பற்றும் நாட்டினருக்குத் தமிழில் பௌத்த சமயப் பெரும்காப்பியமான மணிமேகலையை அறியச் செய்யும் வகையில் அந்நாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மலாய், இந்தோனேசியா, சீனம், சிங்களம், தாய், ஜப்பான் உள்ளிட்ட 18 மொழிகளில் மணிமேகலை வெளிவரவுள்ளது. மணிமேகலையின் சிறப்பை உலகம் அறிந்துகொள்ளும் வாய்ப்பு இத்திட்டத்தின் மூலமாக நிறைவேறும்.

செம்மொழி நிறுவனம் தொகுத்துள்ள 2,28,098 சொற்களைக் கொண்டு செம்மொழித் தமிழ் இணைச்சொற் களஞ்சியத் தொகுப்புப் பணியும் தொடங்கப்பட்டுள்ளது.

செம்மொழி நிறுவனத்தின் வளர்ச்சிப் பணியில் ஒரு முக்கிய மைல் கல்லாக அமைவது பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கான பிரெய்லி நூல் பதிப்புத் திட்டமாகும்.

செம்மொழி நிறுவனத்தில் நடைபெற்றுவரும் பல்வேறு திட்டப் பணிகளுள் பார்வை மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் 41 தமிழ்ச் செவ்வியல் நூல்கள் உட்பட 46 தமிழ் நூல்களையும் பிரெய்லி நூல்களாக வெளியிடும் திட்டம் நிறைவுபெறும் நிலையில் உள்ளது.

1. தொல்காப்பியம்
2. நற்றிணை
3. குறுந்தொகை
4. ஐங்குறுநூறு
5. பதிற்றுப்பத்து
6. பரிபாடல்
7. கலித்தொகை
8. அகநானூறு
9. புறநானூறு
10. திருமுருகாற்றுப்படை
11. பொருநராற்றுப்படை
12. சிறுபாணாற்றுப்படை
13. பெரும்பாணாற்றுப்படை
14. முல்லைப்பாட்டு
15. மதுரைக்காஞ்சி
16. நெடுநல்வாடை

17. குறிஞ்சிப்பாட்டு
18. பட்டினப்பாலை
19. மலைபடுகடாம்
20. நாலடியார்
21. நான்மணிக்கடிகை
22. இன்னாநாற்பது
23. இனியவைநாற்பது
24. கார்நாற்பது
25. களவழிநாற்பது
26. ஐந்திணைஐம்பது
27. ஐந்திணைஎழுபது
28. திணைமொழிஐம்பது
29. திணைமாலைநூற்றைம்பது
30. பழமொழி
31. சிறுபஞ்சமூலம்
32. திருக்குறள்
33. திரிகடுகம்
34. ஆசாரக்கோவை
35. முதுமொழிக்காஞ்சி
36. ஏலாதி
37. கைந்நிலை
38. சிலப்பதிகாரம்
39. மணிமேகலை
40. முத்தொள்ளாயிரம்
41. இறையனார் அகப்பொருள்
42. நன்னூல்
43. புறப்பொருள் வெண்பாமாலை
44. தண்டியலங்காரம்
45. யாப்பருங்கலக்காரிகை
46. நம்பியகப்பொருள்

இந்த நூல்கள் அனைத்திலும் எளிய உரையும், மூலபாடங்கள் எளிய சந்தி அமைப்பிலும் இடம்பெற்றிருக்கும். கடந்த மார்ச்சு மாதம் தொடங்கப்பட்ட இத்திட்டம் வரும் டிசம்பர் மாதம் நிறைவுபெறும். அதன் பின்னர் இந்நூல்கள் அனைத்தும் அச்சிடப்பட்டுப் பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.

(இயக்குநர்)